**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

**அ.வ எண் 68/2013**

| | | |
|---|---|---|
| பெயர் | .. | லோகநாதன்(வாசா 3) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| வயது | .. | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு செப்டம்பர் மாதம் 07ம் நாள் இந்நீதிமன்ற நிலை II பலகை எழுத்தர் அருணா ரூபவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

எனது பெயர் லோகநாதன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதன்படி இன்று நான் ஆஜராகி உள்ளேன். நான் ஆட்டோ டிரைவர் வேலை பார்த்து வருகிறேன். நான் தான் லோகநாதன் என்பதற்கு அடையாள அட்டை ஏதாவது கொண்டு வந்துள்ளேனா என்றால் எனது ஒட்டுநர் உரிம அட்டை எப்போதும் என் பையில் இருக்கும். அதை கொண்டு வந்துள்ளேன். புஷ்ப காந்தியம்மாள் உயில் எழுதியது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. புஷ்ப காந்தியம்மாள் அவரது மகள் கலைச்செல்வி பெயரில் உயில் எழுதி வைத்தார். கலைச்செல்வி எனது எதிர்புறம் உள்ள வீட்டில் வசித்து வந்தார். புஷ்ப

காந்தியம்மாள் அந்த உயிலை யார் யார் பெயருக்கு எழுதி வைத்தார் என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 உயில் ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த உயில் ஆவணத்தில் என்னுடன் சேர்ந்து கருப்பையா என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். அந்த கருப்பையா தற்போது உயிருடன் இல்லை. அந்த உயில் ஆவணத்தை மனோகர் என்பவர்தான் தயார் செய்தார். அந்த உயில் ஆவணத்தில் முதல் பக்கத்தின் பின்பக்கம் புஷ்ப காந்தியம்மாள், சாட்சி கருப்பையா மற்றும் நான் கையெழுத்து போட்டோம். அந்த பக்கத்தில் உள்ள ரேகை யாருடையது என்றால் எனக்கு தெரியாது.

<u>குறுக்கு விசாரணை:</u>

பழங்காநத்தத்தில் மனோகரன் என்ற பெயரில் நிறைய நபர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல் லோகநாதன் என்ற பெயரிலும் அந்த பகுதியில் நிறைய பேர் இருக்கிறார்கள் என்றால் இருக்கலாம். நான் 45 வருடங்களாக பழங்காநத்தத்தில் தான் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 22 வயது முதல் ஆட்டோ ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். ஆவண எழுத்தர் மனோகரன் என்பவருக்கு கூப்பிட்டால் ஆட்டோ ஓட்டுவேன் என்றால் சரிதான். யார் கூப்பிட்டாலும் ஆட்டோ ஓட்டுவேன். கடந்த 45 வருடங்களாக ஆவண எழுத்தர் மனோகரனை எனக்கு தெரியும். அவர் எங்கு சென்றாலும் எனது ஆட்டோவில் நான் அவரை வைத்து ஓட்டி செல்வேன் என்றால் அவர் கார் வைத்துள்ளார். எனது ஆட்டோவை அழைத்தால் நான் ஆட்டோவில் கூட்டி செல்வேன். ஆவண எழுத்தர் மனோகரன் ஏதாவது ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போட வேண்டும் என என்னை அழைத்தால் நான் சென்று கையெழுத்து போடுவேன் என்றால் இதுவரை அவ்வாறு கையெழுத்து போட அழைத்தது கிடையாது. மேற்படி உயில் ஆவணத்தில்

நான் எங்கு வைத்து சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் மனோகரன் அலுவலகத்தில் வைத்து போட்டேன். உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு என் வீட்டிற்கு எதிர்புறம் வசித்து வந்த கலைச்செல்வி தான் என்னை அழைத்தார். எந்த சொத்து சம்பந்தமாக உயில் என்ற விபரத்தை அவரிடம் நான் கேட்டேனா என்றால் கலைச்செல்வி மற்றும்அவரது தயார் புஷ்ப காந்தியம்மாள் கோவில்பட்யில் உள்ள சொத்து சம்பந்தமாக உயில் என்ற விபரத்தை அவர்களாகவே என்னிடம் தெரிவித்தார்கள். அந்த சொத்துக்களின் உரிமை மூலம் மற்றும் அந்த சொத்து எங்கு அமைந்துள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டவுடன் அதில் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்பது எனக்கு தெரியாது என்றாலும், நான் கையெழுத்து போட்டவுடன் வந்து விட்டேன் என்றாலும் சரிதான். அந்த உயில் எழுதுவதற்கு யார் யார் உடன் வந்தார்கள் என்றால் கலைச்செல்வி, புஷ்ப காந்தியம்மாள், சாட்சி கருப்பையா மற்றும் நான் இருந்தோம். மற்ற நபர்கள் யார் இருந்தார்கள் என நான் கவனிக்கவில்லை. மனோகரன் அலுவலகத்தில் இருந்து நானும் சாட்சி கருப்பையாவும் அவரது இரு சக்கர வாகனத்தில் சார்பதிவாளர் அலுவலகம் சென்றோம். மற்ற நபர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எப்படி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. புஷ்ப காந்தியம்மாளை எனக்கு தெரியாது என்றாலும் அவர் மதுரை வந்ததே கிடையாது என்றாலும் சரியல்ல. அந்த உயில் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை நான் படிக்கவில்லை. அந்த உயில் எத்தனை பக்கம் இருந்தது என்பது எனக்கு தெரியாது. நானும் கருப்பையாவும் கையெழுத்து போடுவதற்கு முன்பு அதில் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது ஞாபகம் இல்லை. என்னை யாரும் சாட்சி போட அழைக்கவில்லை

என்றாலும் புஷ்ப காந்தியம்மாள் எனக்கு தெரியாது என்றாலும், அந்த உயில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் நாங்கள் தெரியாமல் கையெழுத்து செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் பொய் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.